

கதை - வசனம் - டைரக்ஷன்

K. S. கோபாலகிருஷ்ணன்

# தபால்காரன் தங்கை

ரவி புரொடக்ஷன்ஸ்

# தபால்காரன் தங்கை

| | |
|---|---|
| ஜெமினி கணேஷ் | வாணிஸ்ரீ |
| எம். என். நம்பியார் | சைலஸ்ரீ |
| சுந்தரராஜன் | சுந்தரிபாய் |
| முத்துராமன் | சிவகாமி |
| நாகேஷ் | ஜெயகுமாரி |
| மாஸ்டர் ராமு | கலாவதி |

கௌரவ நடிகர்கள்
டி. கே. பகவதி, எம். ஆர். ஆர். வாசு
மற்றும் பலர்

பின்னணி :
டி. எம். சௌந்தரராஜன், பி. சுசீலா,
எல். ஆர். ஈஸ்வரி.

இசையமைப்பு :
திரை இசைத் திலகம்
கே. மகாதேவன்

பாடல்கள் :
கவிஞர் கண்ணதாசன்

தயாரிப்பு:
பாலு

கதை—வசனம்—டைரக்ஷன் :
"இயக்குநர் திலகம்"
கே. எஸ் கோபாலகிருஷ்ணன்

## கருத்துரை :

உடன் பிறந்த தங்கையைக் காட்டிலும், விதவையான சிறிய தாயாரையும், அவரது மகளையும், தன் கண்களைக் காட்டிலும் மேலாக ஆதரித்து வந்தான் தபால்காரன் கண்ணன். ஆனால் குறுக்கு வழியில் பணக்காரர்கள் ஆகும் ஆசையில் பல தவருன சூதாட்ட வழியில் ஈடு படுகின்றனர். எதிர்பாராத வகையில் அவர் களுக்கு ஜாக்பாட்டில் பதினைந்து லட்ச ரூபாய் கிடைத்து, லட்சாதிபதியான திமிறினல் அவர் கள் கண்ணனை வெறுத்து ஒதுக்குகின்றனர்.

தேவநாதர் பெரும் பணக்காரர் என்ருலும் பெரும் தொழு நோயால் பாதிக்கப்பட்டு வந்தார். அவரது ஒரே குழந்தை பாபுவை அவரிடம் நெருங்கவிடாமல் பணத்தை அபகரிக்க முயல் கிருன் கஜபதி. ஆனல் குழந்தைப் பாசத்தினல் ஏங்குகிருர் தேவநாதன்!

கண்ணன் தங்கை லட்சமிக்கு திருமண மாகிறது. இஞ்சினியராக வேலை பார்த்த தியாகு எதிர்பாராத விபத்தில் கண்களை இழந்து குருடனுகிருன்! இதனல் இளந்தம்பதிகள் தேவ நாதன் வீட்டில் வாழ்கின்றனர்.

கொலையை தடுக்க முயன்ற தபால்காரன் கண்ணன் இருபதாயிரம் ரூபாய் பெருமான முள்ள இன்ஷூரன்ஸ் கவரை தவறவிடுகிருன். இதனல் அவனுக்கு சிறை தண்டனை கிடைக் கிறது.

தபால்காரன் தங்கையான லட்சுமி, தேவநாதனுக்கு அன்புடன் பணிவிடைகளை செய்கிறாள்! தன்னைக் கண்டாலே வெறுக்கும் மனிதர்கள் உள்ள உலகில் லட்சுமி போன்ற நல்ல உள்ளங்களும் உள்ளன என்று உள்ளம் பூரிக்கிறார். தன் குழந்தையைக் காணத் துடிக்கிறார். இடையே பொல்லாத மனிதர்கள் லட்சுமிக்கும் தேவநாதனுக்கும் தொடர்பு என்று வதந்தியை பரப்புகின்றனர். அவரது சொத்துக்காக கஜபதி போட்டி போடுகிறார்.

சிறைச் சென்ற தபால்காரன் கண்ணன என்ன ஆனான்?

கண்களை இழந்த தியாகுவின் கதி என்ன?

குழந்தை பாசத்தினால் துடித்த தேவநாதன விரும்பியது கிடைத்ததா?

அவரது சொத்துக்கள் என்ன ஆயிற்று?

லட்சுமியின் நிலை என்ன?

இத்தனைக்கும் விடை வேண்டாமா?

உங்கள் ஊர்களில் உள்ள அபிமான தியேட்டர்களில் நடைபெறும் 'தபால்காரன் தங்கை' விடையளிப்பாள்.

## பாடல்கள் :

(1)

இயற்றியவர்
கண்ணதாசன்

பாடியவர்கள்
டி. எம். சௌந்தரராஜன்
பி. சுசீலா

பெண் : கரிகாலன் கட்டி வைத்தான் கல்லணை—நான்
கண்களுக்குள் கட்டி வைத்தேன் கண்ணனை-
மன்னனை (கரிகாலன்

ஆண் : காவிரி பெருக்கெடுத்தால் கொள்ளுமிடம்
கொள்ளிடம்
காதல் பெருக்கெடுத்தால் பூவிடம்
பெண்ணிடம் (கரிகாலன்

ஆண் : பன்னிரண்டு நூற்றாண்டு சென்றது—அணை
பழுதில்லாமல் காலங்களை வென்றது

பெண் : அந்தக்காலப் பெண்மை போன்ற
அணையிது—குலம்
அழுத்தமாக வாழவைக்கும் துணையிது
(கரிகாலன்

பெண் : காவிரியின் கெண்டை என்ன துள்ளுது?

ஆண் : உன் கண்ணைப் பார்த்து சொந்தமென்று
சொல்லுது

பெண் : தேக்கிய நீர் திறந்துவிட்டால் வெள்ளமே

ஆண் : ஆசை தேக்கியதைத் திறந்துவிட்டால்
வேகமே (கரிகாலன்

இயற்றியவர்
கண்ணதாசன்

பாடியவர்
எல். ஆர். ஈஸ்வரி

(தொகையறு)

தோசா பஜால் மோரா.. ஆ.. ஆ...
சித்ரு பதல் கயா.. ஆ ஆ...
கொயி நஹி மந்துலப்பூ... ஊ...

(பாட்டு)

மைனு மாட்டிக்கிட்டா—இந்த
மார்க்கட்டிலே ஒரு பாக்கெட்டிலே—மைனு

மாடிமேலே ஜாகைவச்சி ஜாலிபண்ணிட்டான்
ஜாலி பண்ணி ஜாகை தன்னே காலி பண்ணிட்டான்

மைனு மாட்டிக்கிட்டா அந்த மார்க்கட்டிலே
ஒரு பாக்கெட்டிலே மைனு மாட்டிகிட்டா
மாட்டிக்கிட்டா மாட்டிக்கிட்டா...
ஜேக்பாட்... ஜேக்பாட் ஜேக்பாட் ஜேக்பாட்
அஞ்சி குதிரை ஒண்ணு வந்தா
ருபா பதினஞ்சி லட்சம்
அதிலே ஒண்ணு வரலேயின்னு அவமானந்தான்
மிச்சம்
பஜகோவிந்தம் பர்பின் ஹீநர் ஜேக்பாட்.
ஹில்லி பில்லி சௌண்ட ஆப் மியூ ஆக் ஜேக்பாட்
ஐ ஆம் தோ ஏஞ்சல் ஜேக்பாட் யூ டார்லிங்,
ஜேக்பாட்
அபோட் ஜேக்பாட் எஸ்கொயர் ஜேக்பாட்
கரேஜ் ஜேக்பாட் கமான் கமான் ஜாக்பாட்
ஜெயலலிதா ஜாக்பாட் ஜெய்சங்கர் ஜேக்பாட்
ஜெய்பாலாஜி ஜேக்பாட்
ஜேக்பாட் ஜேக்பாட் ஜேக்பாட்...ஊ...

இயற்றியவர்
கண்ணதாசன்

பாடியவர்:
பி. சுசீலா

பொறுக்துக்கோ! ஐயா
பொறுத்துக்கோ!
கொஞ்சம் போகட்டும் மனசு மாறட்டும்
பூஞ்சிட்டு மான்குட்டி போகின்ற போக்கிலே
போகட்டும் (பொறுத்துக்கோ

மாடத்துப் பூனை மன்றாடுது பூனையின் குட்டியோ
விளையாடுது
தேவைப்பசு கன்றுக்கும் கன்றுக்குட்டி பாலுக்கும்
ஏங்கவிட்டு இந்த உள்ளம் திண்டாடுது
(பொறுத்துக்கோ

பூதம் என்பது இல்லாதது தெய்வம் ஒன்றே
உண்டானது
பூதம் பார்த்த கண்ணிலே தெய்வம் பார்க்கும்
வரையிலே
காத்திருக்கக் கூடாதா இன்றாவது (பொறுத்துக்கோ

ஓடிவா கண்ணே மாடிமேலே—நான்
ஓடி ஒளியப் போகிறேன் அப்பா பின்னாலே
உங்க அப்பா பின்னாலே
அந்த மிட்டாய் பையிலும் அன்பு மிட்டாய் நெஞ்சிலும்

மறைஞ்சிருக்கு அப்பாவின் மார்பிலே
முடிஞ்சா தெரிஞ்சுக்கோ தெரிஞ்சா எடுத்துக்கோ
கண்ணே எடுத்துக்கோ ராஜா எடுத்துக்கோ
ஐயா எடுத்துக்கோ!

லைன். ஆப்டோன்

கலர் பிளாக்குகள்

செய்ய சிறந்த இடம்

★

**சிந்தியா பிராசஸ் கம்பெனி**

11, பந்தர் தெரு.

சென்னை-1.

போன் : 25898

தினசரி காலண்டர்கள்

படக் காலண்டர்கள்

தீபாவளி, கிருஸ்துமஸ், பொங்கல்

வாழ்த்துக்கள்

மர்ம நாவல்கள்

சினிமா, மேடைப்பாடல்

புத்தகங்கள் மலிவு விலையில்

கிடைக்கும்.

கிடைக்குமிடம்

குணமகள் புத்தகப் பண்ணை

11-பந்தர் தெரு (மாடி)

சென்னை-1